அகநானூறு மாந்தர்களின் கூற்று முறைகள்

சு.கிருஷ்ணமூர்த்தி
கவுரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி, சிவகங்கை

மலர்: 3

இதழ்: 1

தொகுதி: II

மாதம்: ஜூலை

வருடம்: 2018

ISSN: 2454-3993

முன்னுரை

சங்கப் பாடல்களில் பெரும்பான்மையானவை தலைவன், தலைவி, தோழி, பரத்தை ஆகியோர்களைச் சுற்றிப் படைக்கப்பட்டுள்ளன. இப்பாத்திரங்களுள் முக்கியமானதாகத் திகழ்வது தலைவன், தலைவி, தோழியாகும். அகநானூறு மருதத் திணையில் இவர்களின் கூற்றுக்களைப் பற்றி விரிவாகக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மருதத் திணைப் பாடல்களில் தலைவி கூற்று

மருதத் திணையில் தலைவி கூற்றுப் பாடல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. தலைவி கூற்றுப் பாடல்களாக 6, 16, 26, 36, 56, 66, 146, 196, 206, 266 ஆகிய பத்துப் பாடல்கள் காணப்படுகின்றன. தமிழ்ப் பண்பாட்டினை வெளிக்காட்டுவது பெண்ணினால் மட்டுமே என்பர். அகத்திணை மாந்தர்களுள் குறையொன்றும் இல்லாத தன்மையினைக் கொண்டவளாகத் தலைவி திகழ்கிறாள். அகவுலகில் தலைவியே தலைமை உடையவள் ஆவாள். இத்தலைவியின் பெருமையைத் தலைவன், தோழி ஆகியோர் கூறுவதினின்றும் புலனாகின்றன. இந்நிலையில் சிறப்புற்று விளங்கும் தலைவியைப் பற்றிய அகநானூறு மருதத் திணைப் பாடல்களில் தலைவியின் திறன், பண்புநலன், இயல்புகள் அமைக்கப்பட்டுள்ளது.

பெயர் குறியாப் பண்பு

அக உலகப் பொதுமையைக் காட்டுவதற்காகச் சங்கப் புலவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு பெரும் இலக்கிய உத்தி, குறிப்பிட்ட ஒருவர் பெயரைச் சுட்டாமல் அகப் பாடல்களைப் பாடியதாகும். இதனை,

"மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்"[1]

என்று தொல்காப்பிய நூற்பா கூறுகின்றது. அகப்பாடல்கள் அனைத்தும் சுட்டி ஒருவர் பெயர் கொள்ளப் பெறாதவை ஆகும். அதாவது ஐந்திணைக் காதல் ஒழுக்கங்கள் அனைத்து மக்களையும் உள்ளடக்கியதாகும். தலைவன், தலைவி, தோழி என்று இருக்குமே தவிர, தலைவன் பெயரோ, தலைவி பெயரோ, தோழி பெயரோ எந்த அகப்பாடலிலும் காணப்படாது. பொதுமையைக் காட்ட ஒவ்வொரு நிலத்திற்குரியப் பொதுப் பெயராகிய நாடன், ஊரன் போன்ற

பெயர்களைப் பயன்படுத்தினர் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. இவ்விடத்தில் **"தனிப்பட்டோர் வாழ்க்கையில் காணும் மெய்யான நிகழ்ச்சிகளையே அகப் புலவன் பாடினும் அவை தூய முதல் நிலையில் வைத்துப் பொது நிலைக்கு உயருமாறு பாடப்பெறும் அகத்திணை மாந்தர் கூற்றுகளின் யாண்டும் மக்களின் இயற்பெயர்கள் வாரா. ஆங்கு எவ்வகையான மெய்ப் பெயருக்கும் புனை பெயருக்கும் இடம் இல்லை"**[2] என்று நா. சுப்புரெட்டியார் கூறுவது மனங்கொள்ளத் தக்கதாகும். அகப்பாடல்கள் அன்பின் முதிர்ச்சியாக உலகில் உள்ள காதலர்கள் அனைவருக்கும் உரியவையாகும். ஒரு தனிப்பட்ட இனத்திற்கும், மொழியினருக்கும் காதல் உட்பட்டதல்ல என்பதை உணரமுடிகின்றது. **இதையே "அகப் பொருளின் கிடக்கை பொதுவாதலின் அந்தச் செய்யுளும் சமுதாயம் சுட்டும் பொதுப் பெயர்களால் அமைய வேண்டுமேயன்றி ஒருவர் தம்தனிப் பெயரால் அமையலாகாது என்று இலக்கிய முறை பாடலுக்கு வரம்பு வகுத்துரைத்தனர்"**[3] என்று வ.சுப.மாணிக்கனார் கூறுகின்றார். இதிலிருந்து சங்க இலக்கியத்தின் அகப்பாடல்கள் தனிப்பெரும் பண்பை உடையனவாக அமைந்துள்ளன என்பதை அறியமுடிகின்றது.

தலைவி

தலைவி என்ற சொல்லிற்கு, "மனைவி, தலைமைப் பெண், அகப்பொருட் கிழத்தி, கதாநாயகி" 4 என்று கழகத் தமிழ் அகராதி விளக்கம் தருகிறது. பேண் என்றாலே பெருமை உடையவள் தான் அதனாலேயே பெண்ணின் பெருமையை முப்பாலிலும் வள்ளுவர் சுட்டுகின்றார். இதனை,

"பெண்ணின் பொருந்தக்க யாவுள? கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்"[5]

என்று பெண்ணின் பெருமைகளில் மிகச் சிறந்தது அவளின் கற்பாகும். அதனை நெறி தவறாமல் மன உறுதியுடன் காத்திருப்பவள் போற்றுதற்குரிய வலிமையுடையவள் என்று அறத்துப்பாலில் வள்ளுவர் கூறுகின்றார்.

பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகற்குக் கிழத்தி கூறியது

தலைவன், தலைவியைப் பிரிந்து சென்று பரத்தையுடன் அவளது இல்லத்தில் இருந்து வந்து தலைவியைப் பாராட்டினான். தலைவியோ, தலைவன் பரத்தையுடன் இருந்து வந்தது தெரிந்தும், தெரியாதது போல் நடந்து ஊடல் கொள்கிறாள். இதனை,

"அரிபெய் சிலம்பின் ஆம்பல்அம் தொடலை
அரம்போழ் அவ்வளைப் பொலிந்த முன்கை
இழைஅணி பணைத்தோள், ஐயை தந்தை
மழைவளம் தருஉம் மாவன் தித்தன்" (அகம். 6: 1-4)

என்று தலைவன், தலைவியின் ஊடலை நீக்க முயற்சி செய்கின்றான். தலைவியோ, உள்ளிடு பரல்கள் பெய்த சிலம்பினையுடையவள். நீராம்பலால் தொகுக்கப் பெற்ற மாலையினை அணிபவள். அரத்தால் போழ்ந்து அழகியதாகச் செய்த வளையல்களால் அழகு பெற்று விளங்கும் முன்கையினை உடையவள் என்று தலைவன் பலவாறு அவளை வருணித்துப் புகழ்கிறான்.

"பிண்ட நெல்லின் உறந்தை ஆங்கண்
கழைநிலை பெறா அக் காவிரி நீத்தம்
குழைமாண் ஒள்இழை நீவெய் யோளோடு
வேழ வெண்புணை தழீஇ, பூழியர்
கயம்நாடு யானையின் முகன் அமர்ந் தாஅங்கு
ஏந்துஎழில் ஆகத்துப் பூந்தார் குழைய" (அகம். 6: 5-10)

காவிரியின் புதுநீர்ப் பெருக்கிலே மாட்சிமையுடைய குழையுடன் ஒளிரும் ஆபரணங்களை அணிந்த பரத்தையுடன் நீராடி மகிழ்ந்த தலைவனைப் பற்றிய செய்தியை அறிந்தும் அறியாதவளாய் ஊடல் கொண்டு தலைவி பேசுவதனை உணரமுடிகின்றது.

பாணர்க்குத் தலைவி வாயில் மறுத்தல்

தலைவன் வரவை எதிர்நோக்கிய தலைவியின் காதல் உணர்வுகள், வருந்திய நிலையில் வரவு நீட்டித்தமையால் துன்பம் பெருகிக் கிடக்கின்றாள். இந்நிலையில் இடையிட்டு வரும் தலைவன், மனம் மாறித் திரும்ப வரவில்லை எனினும் அலர்க்கு அஞ்சியே தன் மனைக்கு வருகின்றான் என அறிந்த போது தலைவிக்கு, தலைவனிடம் வெறுப்பு தோன்றுகிறது. இந்நிலையில் தலைவியின் மனம் வாயில் மறுத்து நிற்கின்றது. இதுவே வாயில் மறுத்தல் ஆகும். இதனை, ஆ.இராமகிருட்டிணன **"தலைவன் கொள்ளும் உறவு அன்பின் அடிப்படையில் அமைந்து உள்ளதால் தலைவனின் மனம் ஒரு தலைப்படாது ஊசலாடுவதாக உணரும் தலைவியின் இவ்வுணர்வு வாயில் மறுக்கும் மன நிலையை உருவாக்கி நிற்கிறது"** னத் தலைவி வாயில் மறுத்தற்குரிய காரணங்களாக குறிப்பிடுகின்றார். பரத்தமை மேற்கொண்ட தலைவனுக்கு, உதவி செய்த பாணன் தெருவழியே நடந்து சென்ற போது, பசு பாய்ந்து வந்தது. பாணன் பயந்து கலங்கித் தலைவியின் வீட்டினுள் புகுந்தான். அவனைப் பற்றிய செய்தியைச் சுட்டி தோழியிடம் நகையாடினாள் தலைவி. தோழி, தலைவனை மன்னித்து ஏற்றுக் கொள்ளும்படி கூற, அவள் வாயில் மறுப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

"பரிவொடு வருஉம் பாணன் தெருவில்
புனிற்று அப் பாய்ந்தெனக் கலங்கி யாழ்இட்டு
எம்மனைப் புகுந் தோனே, அதுகண்டு
மெய்ம்மலி உவகை மறையினென் எதிர்சென்று
இம்மனை அன்று அஃது உம்மனை என்ற
என்னும் தன்னும் நோக்கி
மம்மர் நெஞ்சினோன் தொழுதுநின் றதுவே" **(அகம். 56: 12-16)**

பாணன் உள்ளே வந்ததும் அவன் எதிரே சென்று, உங்கள் மனை இந்த மனையன்று, அஃது பரத்தையர் மனையாகும் என்று தலைவி பாணனிடம் கூறினாள். அவன் தலைவியை நோக்கி மயங்கிய நிலையில் அச்சமடைய நெஞ்சம் உடையவனானான். தொழுது நின்றான். இச்செயலினை நினைத்தால் எனக்குச் சிரிப்புதான் வருகிறது என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

பாணற்குத் தலைவி வாயில் மறுத்தல்

பரத்தையிடம் சென்ற தலைவன், தலைவியைப் பார்ப்பதற்கு ஆசைகொண்டு, தன் பாணனைத் தலைவியிடம் தூதாக அனுப்புகின்றான். பாணனிடம் தலைவன் மீண்டு வருவதற்குத் தலைவி இசைய மறுத்துப் பேசுகிறாள். இதனை,

"வலிமிக முன்பின் அண்ணல் ஏறி
பனிமலர்ப் பொய்கைப் பகல்செல மறுகி
மடக்கண் எருமை மாண்நாடு தழீஇ
படப்பை நண்ணி, பழனத்து அல்கும்
கலிமகிழ் ஊரன் ஒலிமணி நெடுந்தேர்
ஒள்இழை மகளிர்சேரி, பல்நாள்
இயங்கல் ஆனாது ஆயின் வயங்கிழை" **(அகம். 146: 1-7)**

என்று பெரும் வலிமையையும் உடைய எருமைக்கடா, குளிர்ந்த மலர்களையுடைய பொய்கையின் கண் பகற்பொழுது முழுவதும் கழியும் வரை சுழன்று உழக்கிக் கிடந்துவிட்டு, பின்னர் மடப்பம் பொருந்திய கண்களையுடைய மாட்சிமைப்பட்ட பெண் எருமையினைத் தழுவிய வண்ணம் தோட்டங்களைச் சென்றடைந்து வயல்களில் தங்குகிறது. அதுபோல் தலைவன் பரத்தையின் இல்லத்தில் இருந்து விட்டு என்னைக் காண மறுத்து விட்டான். இப்பண்புள்ளவன் இப்போது என்னைக் காண வரவேண்டாம் என்று தலைவி பாணனிடம் கோபமாகக் கூறி வாயில் மறுக்கின்றாள்.

மருதத் திணைப் பாடல்களில் தோழி கூற்று

அகத்திணை மாந்தர்களுள் தோழிக்கெனத் தனிச் சிறப்பிடம் உண்டு. களவு, கற்பு என்னும் இரு துறைகளில் தலைவன், தலைவியின் காதல் வாழ்க்கையில் பெரும் பங்கெடுத்துக் கொண்டு துணைபுரிபவள் தோழியாவாள். ஆக இலக்கியங்களில் தலைவன், தலைவி இருவரையும் இணைக்கும் பாலமாகவும் அவர்களது நலத்தை மட்டும் கருதிப் பல துன்பங்களுக்கு இடையில் அறிவுப்பூர்வமாகச் செயலாற்றும் திறனுடையவளாகவும் தலைவியின் மனநிலைக்கு ஏற்ற வகையில் செயல்படும் தன்மை உடையவளாகவும் தோழி திகழ்கின்றாள். இத்தனித்துவம் பெற்று விளங்கும் தோழியைப் பற்றி, மருதத் திணைப் பாடல்களில் தோழியின் பண்பு நலன்கள், தோழியின் திறன்கள், தோழியைப் பற்றிய சிறப்புகள் ஆகியன பற்றிக் காண்பது சிறப்புடையதாகும்.

தோழிக்கு வேறு பெயர்கள்

தலைவிக்கு உயிராக விளங்கும் தோழியை இருளை, பாங்கி, சிலதி, இணங்கி, துணைவி, சேடி, சகி என்ற சொற்களின் வழியே பிற்காலப் புலவர்கள் அடையாளம் ஏற்படுத்தித் தந்து இருப்பினும் ‘தோழி’ என்னும் சொல்லே சிறப்புடையதாகவும், பழமை மிக்கதாகவும் விளங்குகின்றது. தொல்காப்பியர் முதலான இலக்கண நூலார்களும் தோழி என்றே குறிப்பிடுகின்றனர்.

குறை நயப்பித்தல்

தலைவன், தலைவியோடு கூடும் கூட்டத்திற்கு உடன்பட்டுக் கூறிய தோழி, தலைவியிடம் சென்று அவளையும் அக்கூட்டத்திற்கு நயந்து உடன்படுமாறு செய்வதே ‘குறை நயப்பித்தல்’ என்பர். இதனை, **“தலைவிக்கமைந்த அச்சம், நாணம், மடம் ஆகிய பண்புகளில் தலைவன், தோழியின் துணையோடு களவை நீட்டிக்க முனைதல் இயல்பாகி விடுகிறது. துலைவனின் இச்செயல் குறையுறுதல் எனப்படும். துலைவியின் இசைவு குறைநேர்தல் எனப்படும். தோழியின் துணைநலம் குறை நயப்பித்தல் எனப்படும்”**[11] என்று ந.சுப்புரெட்டியர் குறை நயப்பித்தலுக்கு விளக்கம் தருகின்றார்.

நாண் மிகுதியால் தலைவி, தலைவன் மீது கொண்ட காதலை மறைத்துக் கூட்டத்திற்கு இசைவில்லாதாள் போல நிற்கக் காணும் தோழி, இருவர்க்கும் உளதாகிய முற்கூட்ட உறவினைத் தான் அறிந்துள்ளமையைக் குறிப்பாக உணர்த்தியும் தலைவி பொருட்டுத் தலைவன் இரந்து பின்னின்ற பல்வேறு நிலைகளைக் கூறித் தோழி தலைவியைக் குறை நயப்பிப்பாள்.

களவொழுக்கத்தில் தோழியை வாயிலாகக்கொண்டு தலைவன், தலைவியைக் கூடக் கருதினான். தலைவன் வேண்டுகோளுக்கு உடன்பட்ட தோழி தலைவியின்பாற் சென்று அவன் வேண்டுகோளுக்கு இணங்கும்படித் தலைவியிடம் கூறுகின்றாள். இக்குறை நயப்பித்தல் பற்றி பிற இலக்கியங்களிலும் காணமுடிகின்றது.

“கற்போல் நாவினேன் ஆகி, மற்று அது
செப்பலென் மன்னால் யாய்க்கே, நல்தேர்க்
கடும்பகட்டு யானைச் சோழர் மருகன்
நெடுங்கதிர் நெல்லின் வல்லம் கிழவோன்
நல்லடி உள்ளா னாகவும், ஒல்லார்” **(அகம். 356: 10-14)**

என்னும் இவ் அகநானூற்றுப் பாடலில் நல்ல தேரினையும், விரைந்த நடையையுடைய ஆண் யானைகளையும் உடைய சோழ மன்னனின் வழித் தோன்றலாகிய நெல்வளம் மிக்க வல்லம் என்னும் ஊருக்குத் தலைவன் பிறர்க்குத் தீங்கு நினையாத நல்ல உள்ளம் கொண்டவனாக இருந்தும் அவனது பகைவர்கள் அவனைப் பற்றிக்கொள்ள விடாது முயல்கின்றனர். நன்கு தழைத்து வளர்ந்த அடர்ந்த கூந்தலை உடைய தலைவியே! அவன் நம்பால் அருள் செய்யாது நமக்குக் கொன்றது போலும் துன்பத்தைத் தந்தாலும் அது குற்றமுடையது ஆகாது என்று தோழி தலைவிக்கு குறை நயப்பிக்கக் கூறுகின்றாள்.

தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது

பரத்தையிடம் இருந்து பிரிந்து வந்த தலைமகன் தலைவியை மீண்டும் சந்திக்கத் தோழியின் மூலம் முயலுகிறான். அப்போது தோழி அவனை நோக்கி, அவனது கூடா ஒழுக்கத்தைச் சுட்டிக் காட்டி வாயில் மறுப்பதாக அமைந்துள்ளது இப்பாடல்,

“சேற்றுநிலை முனைஇய செங்கண் காரான்
ஊர்மடி கங்குலில், நோன்தளை பிரிந்து
கூர்முள் வேலி கோட்டின் நீக்கி
நீர்முதிர் பழனத்து மீன்உடன் இரிய
அம்தூம்பு வள்ளை மயங்கி தாமரை
வண்டு ஊது பனிமலர் ஆகும் ஊரே” **(அகம். 46: 1-6)**

அதாவது பரத்தையிடமிருந்து வந்த தலைவன், தலைவியை அடையத் தோழி மூலம் முயற்சித்தான். தோழி அவனது கூடா ஒழுக்கத்தைச் சுட்டியும், அவனுடைய ஊரின் பெருமையைக் கூறியும் எப்படிப்பட்ட ஊரைச் சேர்ந்தவன் என்பதைச் சுட்டிச் சொல்லி அச்சிறப்பிற்குரிய ஊரினை உடைய தலைவனே! நீ தலைவியை விட்டுப் பிரிந்து சென்று உன் விருப்பம் போல் வாழ்ந்தாய் இது தகுமோ? என்றாள் தோழி. குடும்பப் பொறுப்பின்றி இருக்கும் உன்னால் தலைவி வருந்தினும் நீ நினைத்ததைச் செய்ய தடைசெய்ய முடியும். எனவே நீ எங்களுக்கு என்ன உறவு எனக் கூறி, தோழி வாயில் மறுக்கின்றாள். இவ்வாறாக அமைந்து காணப்பட்டதாக தோழி கூற்றுப் பாடல் அமைந்துள்ளதை அறியமுடிகின்றது.

தலைமகனைத் தோழி வரைவு கடாயது

களவொழுக்கத்தில் தலைவன், தலைவியை இரு குறியிடத்தும் கண்டு அளவளாவி வந்தான். இந்நிலையினைக் கண்ட தோழி, ஒரு நாள் தலைவியைக் குறியிடத்தே விட்டுவந்து தாய் வெறியாடல் எடுத்தமையையும் தலைவி வருந்துவதையும் தலைவனிடம் கூறிக் குறிப்பாகத் தலைவியை மணந்து செல்லுமாறு தோழி தலைவனிடம் கூறுகின்றாள். இதனை,

“நின்நகாப் பிழைத்த தவறே - பெரும
கள்ளும் கண்ணியும் கையுறை யாக
நிலைக்கோட்டு வெள்ளை நால்செவிக் கிடா அய்
நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சி
தணிமருங்கு அறியாள், யாய் அழ
மணிமருள் மேனி பொன்நிறம் கொளலே?” **(அகம். 156: 12-17)**

என்பதில் எம் அன்னை, நீர்த் துறையிடத்து நிலைபெற்ற கடவுளுக்குக் கள்ளையும், மாலையையும் நிமிர்ந்து நேர்கொண்ட கொம்பினையும் தொங்கும் காதினையும் உடைய வெள்ளாட்டுக் கிடாயினையும் சேர்த்துக் காணிக்கைப் பொருளாகத் தந்தும், தன் மகள் கொண்ட நோய் தணியும் வழியறியாது அழுமாறு இத்தலைவியின் நீலமணி போன்ற மேனி பசலை பாய்ந்து பொன்னிறங் கொண்டது. இந்நிலை உன்னை நட்புக் கொண்டதால் ஏற்பட்டதா? களவிலே காதலனுடன் உறவாட வந்த தலைவியைக் குறியிடத்தில் நிற்கச் செய்து விட்டு தலைவனைச் சந்தித்த தோழி, தலைவியின் மேனியில் ஏற்பட்ட பசலை நிறம் கண்ட தாய் வருந்துவதாகக் கூறி, தலைவனை நோக்கி விரைவில் மணந்து கொள்ளுமாறு கூறுவதாக இப்பாடலின் கருத்து அமைந்துள்ளது.

தலைவனுக்குத் தோழி கூறியது

பொருள் ஈட்டி வர எண்ணியத் தலைவன், தலைவியைப் பிரியக் கருதினான். பொருள் ஈட்டி உரிய காலத்தில் மீண்டு வந்து தலைவியை மணந்து கொள்வேன். அதுவரை அவளை ஆற்றிடுக என்று தோழியின் கையைத் தொட்டுத் தலைவன் கூறுகின்றான். இக்கூற்றைச் சூள்மொழி எனக் கருதிய தோழி அச்செயல் மிகையானது என்பதுபடத் தலைவனை நோக்கிச் சொல்கின்றாள். இதனை,

“அனைய பெரியோர் ஒழுக்கம் அதனால்
அரிய பெரியோர் தெரியுங் காலை
நும்மோர் அன்னோர் மாட்டும் இன்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண்டு உளதோ, இவ்உலகத்தானே?” (அகம். 286: 13-17)

என்னும் இப்பாடலில் தலைவனின் ஊர் பெருமைகளைக் கூறிய தோழி இப்படிப்பட்ட ஊரைச் சேர்ந்த தலைவனே என்று அவனைப் புகழ்ந்து விட்டு பின்னர் பெரியோர் தமது மனம் என்றுமே விரும்பாத ஒன்றை விரும்பினாலும், தமது கேள்வியறிவாகிய அங்குசத்தைக் கொண்டு மனமாகிய யானையை நல்வழியில் திருப்பி இல்லறமும், பொருளும் வழுவா வண்ணமாகவும், தமது தகுதிக்கு ஏற்பவும் தம் விருப்பம் இருக்கிறதா என்பதை ஆராய்ந்த பின்னரே அதன்படி நடப்பர். இல்லையேல் விட்டு விடுவர். இது பெரியோர்களின் ஒழுக்கமாகும். உன்னைப் போன்ற பெரியோரிடத்திலும் யான் கூறுவது பொய்யன்று என்பது போலும் சத்தியம் செய்யும் செயல் தோன்றுமானால், இவ்வுலகத்தில் உண்மையை யார் காப்பாற்றுவார். யான் அறிகிலேன் என்று தலைவனிடம் தோழி கூறுவது போல இக்கூற்று அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

தோழி தலைமகளை நெருங்கித் சொல்லியது

தலைவியின் ஊடலைத் தீர்க்குமாறு தலைவன் தோழியை வேண்டினான். அதுகேட்ட தோழி தலைவியை நெருங்கி, நீ ஊடல் தீர்ந்து தலைவனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என வற்புறுத்திச் சொல்லியது போல இக்கூற்றுப் பாடல் அமைந்துள்ளது. என்பதை,

“அதுபுலந்து உறைதல் வல்லியோரே
செய்யோள் நீங்க, சில்பதம் கொழித்துத்
தாம்அட்டு உண்டு தமியர் ஆகி
தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப
வைகுநர் ஆகுநல் அறிந்தும்
அறியார் அம்ம, அ∴து உடலு மோரே” (அகம். 316: 12-17)

அதாவது போரில் வெற்றி பெற்ற வீரர்கள் செருக்குடன் தம் பழமையான ஊருக்குத் திரும்பி வருதல் போலப் பெருமிதத்துடன் ஊருக்குள் வந்து சேர்வார்கள். இச்சிறப்பினை உடைய ஊரினை உடையவன் நம் தலைவன். தலைவன் மேற்கொள்ளும் பரத்தமையை வெறுத்து அவரோடு ஊடல் கொள்ளும் பெண்கள், தம்மிடத்துத் திருமகள் விலகிச் செல்ல நொய் அரிசியை முறத்தால் புடைத்துத் தாமே சமைத்து உண்டு தனிமையை மேற்கொண்டவராய், இனிய மொழி பேசும் குழந்தைகள் பால் இன்றி பெரிதும் வருந்தி இருப்பர். இதனை அறிந்தம் அவரது பரத்தமை குறித்து மாறுபாடு கொள்வார் அறிவிலாதவரே ஆவர். ஆதலின் ஊடலைக் கைவிடுக என்று தலைவிக்குத் தோழி நெருங்கிச் சொல்லியதாக இக்கூற்று அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

வாயில் மறுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியது

தலைவன் பரத்தையர் சேரியிலிருந்து மீண்டு வந்து தலைவியைச் சந்திக்க இல்லம் வர எண்ணுகிறான். தோழியின் மூலம் இக்கருத்தைக் கூறி வேண்டிய போது, அதனைத் தோழி மறுக்கிறாள். தலைவன் தோழியிடம் இதற்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றினைக் கூறி நினைவு கூர்ந்து அவளுக்குச் சொல்லியதாக இப்பாடல் அமைந்துள்ளது. இதனை,

“வால் இழை மகளிர் நால்வர் கூடி
கற்பினின் வழாஅ, நற்பல உதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை ஆகஎன,
நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி” (அகம். 86: 12-15)

என்ற பாடலில் முன்பு நடந்த நிகழ்வு ஒன்றைத் தோழியிடம் தலைவன்விழைகின்றான். மணம் முடிந்ததும் சுற்றத்தார் அனைவரும் கூடி ‘நீ பெரிய இல்லக்கிழத்தியாகுக’ என வாழ்த்தித் தலைவனாகிய நான் இருக்கும் ஓர் அறைக்கு தலைவியை அனுப்பி வைத்தனர். உள்ளே வந்த

தலைவியோ நாணமுற்று முதுகினை வளைத்துக் கொண்டு என் முன் நின்றாள். அப்பண்புடையவளை அடையும் பெருவிருப்புடன் தலைவி முகத்தை மூடியிருந்த ஆடையை நீக்கினேன். தலைவி அஞ்சி பெருமூச்சு விட்டாள். நீ இவ்வாறு அஞ்சுவதற்குக் காரணம் ஏதேனும் உண்டா எனத் தலைவியிடம் உன் உள்ளத்திலிருப்பதை ஒழிக்காமல் சொல் என்று தலைவன் கேட்ட அளவில் மானின் செருக்கு மிக்க கண் பார்வையுடன் ஒடுங்கிய கூந்தலுடன் கூடிய தலைவி அவள் உள்ளத்து உள்ளதைச் சொல்லாமல் நாணுற்று நின்றாள். இத்தகைய தலைவி தற்போது ஊடுபவள் அல்லள் என்பதே என் எண்ணமாகும் என்று தலைவன் கூறினான். இவ்வாறு முன்பு நடந்த நிகழ்வு ஒன்றை வாயில் மறுத்த தோழிக்குத் தலைமகன் கூறுவது போன்று இக்கூற்று அமைந்துள்ளது.

தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது

தலைவன் தோழியிடம் தன் தலைவியைக் கூட்டுவிக்க வேண்டித் தாழ்ந்து பணிந்து நின்றான். அந்நிலையில் தலைவியின் நினைவு அவள் உள்ளத்தில் நிலைபெற்று நின்று அவனை வருத்த அவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதாக இக்கூற்று அமைந்துள்ளது. என்பதை,

“நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்
பொன்இணர் நறுமலர்ப் புன்னை வெ.ஃகி
திதியனொடு பொருத அன்னி போல
விளிகவை கொல்லோ, நீயே – கிளி எனச்” (அகம். 126: 14-17)

என்பதில் தலைவன், தலைவியின் சொற்களை, கிளி பேசும் மென் சொற்கள் சிலவற்றையே கூறும் சிவந்த வாயினையும் அவளுடைய கண்களை மீன்களோடு ஒப்பிட்டும் இடையினை மின்னலோடும் சேர்த்துச் சிறப்பித்துத் தன் நெஞ்சிடம் கூறினான். நீதியின் பாற்பட்ட இனிமையும், நன்மையும் தரும் மொழிகளைக் கூறி அடக்கவும் அடங்கானாய் பொன்போலும் பூங்கொத்துக்களையும், நறுமணங் கமழும் மலர்களையும் உடைய புன்னை மரத்தினை விரும்பித் திதியன் என்பவனோடு போரிட்டு இறந்துபட்ட அன்னி என்பவனைப் போல நீயும் இறந்துபடுவாய் போலும் என்று தன் நெஞ்சிற்குச் சொல்லியதாக இப்பாடல் அமைந்துள்ளது.

தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லியது

தலைவி, தலைவனோடு ஊடி இருந்தாள். தலைவன் அவளது ஊடலைத் தணிக்கவும் கூடி மகிழவும் முயன்றான். அவ்வாறு முயல முயல அவளது ஊடலும் அதிகமாயிற்றேத் தவிரக் குறையவே இல்லை. இதனால் மனம் நொந்து தன் நெஞ்சுடன் தலைவன் சொல்லியதாக இக்கூற்று அமைந்துள்ளது. என்பதை,

“ஆர்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலின்
உறைகழி வாளின் உருவுபெயர்ந்து இடைப்ப
மறைதிறன் அறியாள் ஆகி, ஒய்யென
நாணினள் இறைஞ்சி யோளே – பேணி
பருஉப்பகை ஆம்பற் குருஉத்தொடை நீவி
கரும்புஇயிர் ஆய்மலர் வேய்ந்த
இரும்பல் கூந்தல் இருள்மறை ஒளித்தே” (அகம். 136: 23-29)

என்னும் பாடலடிகளானது தலைவி படுக்கையில் என் உயிருக்கு உடம்பாக வந்து கிடைத்தவள். உடம்பு முழுவதையும் புத்துடையால் போர்த்திக் கிடந்தாள். யான் அவளை நெருங்கி அவள் அழகிய முகத்தைக் காண விரும்பி ‘மிக்க புழுக்கத்தால், உனது பிறையொத்த நெற்றியில் அரும்பிய வியர்வையைக் காற்று நீக்குமாறு சிறிது நேரம் திற’ என்று கூறி அன்பு மிகுதியால் போர்வையை உருவினேன். உறையிலிருந்து உருவிய வாள் போல, அவள் உருவம் வெளிப்பட்டு மின்னியது. அவள் எங்கே மறைவது என்று ஒரு கணம் எண்ணி, பெரிய கழுநீர்ப் பூமாலையை நீக்கித் தேர்ந்தெடுத்த தனி மலர்களைவ ண்டுகள் மொய்க்கச் செருகிய கூந்தலை அவிழ்த்துப் பரப்பி

அந்தக் கருமையின் மறைவில், தன் உடம்பை மறைத்து வெட்கமுற்றுத் தலைகுனிந்தாள். அத்தகைய அன்புடைய தலைவி இன்று யான் எவ்வளவு அமைதி கூறினாலும், ஊடல் தனியாமலிருக்கிறாள். அவள் அன்பு எங்கே போயிற்று என்று தலைவன் அதனை நினைத்து எண்ணி தன் நெஞ்சிற்குச் சொல்லியது போல இக்கூற்று அமைந்துள்ளதை உணரமுடிகின்றது.

பரத்தை தலைமகளுக்குச் சூளுரைத்தல்

பரத்தையின் ஆடல், பாடலில் மயங்கினான் தலைவன் எனக் கேட்ட தலைவி அப்பரத்தையைப் பழித்து அவனோடு ஊடினாள். தன்னைப் பழித்தமையைக் கேள்வியுற்ற பரத்தை அவன் கூத்துக் காண வந்த அளவிற்கே என்னைத் தூற்றினாளோ? இனி, அவள் அவனை என்பால் முற்றிலும் இழந்து கதறியழ அவனை நான் கைக்கொள்வேன் எனச் சூளுரைத்து சினந்து கூறியதாக இப்பாடல் அமைந்து காணப்படுகிறது. இதனை,

“கச்சினன், கழலினன் தேம்தார் மார்பினன்
வகை அமைப் பொலிந்த வனப்பு அமை தெரியல்
சுரியல்அம் பொருநனைக் காண்டிரோ? என
ஆதிமந்தி பேதுற்று இனைய
சிறைபறைந்து உரைஇச் செங்குணக்கு ஒழுகும்
அம்தண் காவிரி போலக்
கொண்டுகை வலித்தல் குழ்ந்திசின், யானே!” **(அகம். 76: 9-15)**

என்பதில் பாடல் இசைத்தும் ஆடல் காட்டியும் நான் ஊரனை வசப்படுத்திக் கொண்டேன் எனத் தலைவி கூறுவாளாயின், காவிரி வெள்ளத்தில் தன் கணவனை இழந்து ஆதிமந்தி வருந்தியமை போன்று இவளும் என்னிடத்தே தன் கணவனை இழந்து வருந்துமாறு செய்வேன் என்பது பரத்தையின் சூளுரையாக அமைந்து காணப்படுகிறது.

நயப்புப் பரத்தை இற்பரத்தைக்குச் சொல்லியது

தலைவன் புதிதாகப் பரத்தை ஒருத்தியை விரும்பினான். அப்பரத்தை பழைய பரத்தையான இற்பரத்தை தன்னைப் பழித்தாள் எனக் கேள்விப்பட்டு அவள் தோழிமார் கேட்குமாறு சொல்லியதாக அமைந்துள்ளது இக்கூற்று,

“பாகன் நெடிது உயிர்வாழ்தல் காய்சினக்
கொல்களிற்று யானை நல்கல் மாறே
தாமும் பிறரும் உள்ர்போல் சேறல்
முழவு இமிழ் துணங்கை தூங்கும் விழவின்” **(அகம். 336: 13-16)**

அதாவது பாகன் நெடிதுநாள் உயிர் வாழ்வதற்குக் காரணம், சினம்மிக்க கொல்லும் தொழிலையுடைய யானை அவனைக் கொல்லாது விட்டு வைத்திருப்பதே. அதுபோன்று அப்பெண்டிரும் பிறரும் பெண்மை நலம் வாய்ந்தவர் போல் என்னை ஏசியவண்ணம் தலைவனிடம் செல்லுவதற்குக் காரணம், அப்பெண்கள் தலைவன் காண முழவு ஒலிக்கக் குரவை ஆடும் விழாக் காலத்தே யான் அவ்விடத்துச் செல்லாததே! என்பதை,

“யான் அவன் வாராமாறே வரினே வானிடைச்
சுடரொடு திரிதரும் நெருஞ்சி போல
என்னொடு திரியான் ஆயின், வென்வேல்
மாரி அம்மின் மழைத்தோற் சோழர்
வில்ஈண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை
ஆரியர் படையின் உடைக, என்
நேர்இறை முன்கை வீங்கிய வளையே!” **(அகம். 336: 16-23)**

என்றும் பாடலடிகள் உணர்த்துகின்றன. யானும் என் அழகு நலம் காட்டி அவ்விடத்துச் செல்வேனேயானால், ஞாயிறு செல்லும் திசை நோக்கியே செல்லும் நெருஞ்சிப் பூப்போல யான் செல்லும் இடமெல்லாம் என்னையே சுற்றிச் சுழலுமாறு அத்தலைவனைச் செய்திடுவேன். அவ்வாறு செய்யவில்லை எனில், வென்றிதரும் வேலினையும் மழைபோல் சொரியும் அம்பினையும் மேகம் போன்ற தோற்கிடுகினையும் உடைய சோழரது விற்படை பொருந்திய அரண் கொண்ட வல்லம் என்னும் ஊரின் புறத்தேயுள்ள காவற்காட்டின்கண் வந்தடைந்த ஆரியரது படை தோற்றுச் சிதறி ஓடியது போன்று, சிந்தனையுடைய எனது முன்கையில் உள்ள செறிந்த வளையல்கள் உடைந்து சிதறட்டும் என்று நயப்புப் பரத்தை இற்பரத்தைக்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது போல இப்பாடல் அமைந்துள்ளது.

காதற் பரத்தை புலந்து சொல்லியது

இன்பம் கருதித் தலைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட காதற் பரத்தை, சேரிப் பரத்தையிடம் நட்புக் கொண்டதை அறிந்தமையால் அவன் தன்னுடைய இல்லம் வந்த பொழுது அவனுடன் ஊடல் கொண்டு சொல்லியதாக இக்கூற்று அமைந்துள்ளது.

“பசந்தன்று, காண்டிசின் நுதலே, அசும்பின்
அம்தூம்பு வள்ளை அழற்கொடி மயக்கி
வண்தோட்டு நெல்லின் வாங்குபீள் விரிய
துய்த்தலை முடங்குஇறாத் தெறிக்கும், பொற்புடைக்
குரங்குகளைப் புரவிக் குட்டுவன்
மரந்தை அன்ன என் நலம்தந்து சென்மே” **(அகம். 376: 13-18)**

அதாவது சேற்றிலுள்ள அழகிய துளையையுடைய வள்ளைக் கொடி பின்னுமாறு காட்சியளிப்பதும் நெற்கதிர் வளைந்து விரியுமாறும் துய்யினைத் தலையில் உடைய இறால் மீன்கள் பாய்ந்து திரிதற்கு இடனான அழகிய வளைந்த பிடரியினைக் கொண்ட குதிரையையுடைய குட்டுவனது மரந்தை என்னும் ஊரின் அழகிய தோற்றம் போல் அழகுடைய எம் அழகினை எம்மிடத்தே தந்து விட்டு நீவிர் செல்வீராக, என்று காதற் பரத்தை தலைவன் தன் இல்லம் வந்த பொழுது ஊடல் கொண்டு சொல்வதாக இப்பாடல் அமைந்துள்ளது.

காதற் பரத்தை தலைமகற்குச் சொல்லியது

தலைவனுடன் ஊடல் கொண்ட காமக் கிழத்தி அவனுக்குச் சொல்லியது போல இக்கூற்று அமைந்துள்ளது என்பதை,

“இனியான் விடுக்குவென் அல்லேன், மந்தி
பனிவார் கண்ணள், பலபுலந்து உறைய
அடுந்திறல் அத்தி ஆடுஅணி நசைஇ
நெடுநீர்க் காவிரி கொண்டுஒளித் தாங்குநின்
மனையோள் வவ்வலும் அஞ்சுவல் சினை,” **(அகம். 396: 11-15)**

இப்பாடலில் ஆதிமந்தி என்பாள் நீர் சொரியும் கண்களை உடையவளாய் யாவற்றையும் வெறுத்திருக்க, காவிரிப் பெண்ணாள் ஆடல் அழகில் ஈடுபட்டு அவனை விரும்பிக் கவர்ந்து கொண்டு போய்த் தன்பால் இருத்தி வைத்துக் கொள்வாள் என யான் பெரிதும் அஞ்சுகிறேன் என்று காதற் பரத்தை கூறுகிறாள். மேலும்,

“ஆரியர் அலறத் தாக்கி பேர்இசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவில் பொறித்து
வென்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி அன்ன என் நலந்தந்து சென்மே” **(அகம். 396: 15-19)**

என்பதில் பொங்கிச் சினந்தெழுந்து, அரிய மன்னர்கள் அலறுமாறு அவர்களைத் தாக்கி, பழைமைச் சிறப்பும் பெரும் புகழும் கொண்ட இமயமலையின் மீது விற்கொடியைப் பொறித்து வெஞ்சினைப் பெருவேந்தரைப் பிணித்துக் கொண்டு வந்த சேரனது வஞ்சிமாநகரைப் போன்ற வளமான என் மேனி நலத்தினை என்னிடம் தந்துவிட்டு நீ செல்வாயாக என்று ஊடல் கொண்ட காமக் கிழத்தி தலைவனிடம் கூறியது போல இப்பாடல் அமைந்துள்ளது.

முடிவுரை

சங்கப் பாடல்களில் பெரும்பான்மையானவை அகம் சார்ந்தவையாகும். இப்பாடல்கள் தலைவன், தலைவி, தோழி, பரத்தை, நற்றாய், கண்டோர் போன்றோரைச் சுற்றிப் படைக்கப்பட்டுள்ளன. அகம் என்னும் வட்டத்தில் களவு, கற்பு ஆகிய அமைப்பிற்குள் இருந்து கொண்டு ஐந்திணையின் அமைப்பிற்கு ஏற்றாற்போல் தலைவியின் செயல்பாடுகள் மாறிக்கொண்டே இருக்கின்றது.

தலைவி தன் கற்புக்கு இடையூறு நேரும் காலத்தில் தன்னுடைய களவொழுக்கத்தினைத் தோழி வாயிலாகப் பிறர் அறியுமாறு தெரியப்படுத்தவே அறத்தொடு நிற்றலாகும். தலைவன் பரத்தையரை விட்டுப் பிரிந்து தன் மனைக்கு வருகின்றான் என அறிந்த தலைவி பரத்தையால் கழித்துப் போடப்பட்ட கலனாகத் தலைவனைக் கருதி தலைவி வாயில் மறுத்து நிற்பதனைக் காணமுடிகின்றது.

அக இலக்கியங்களில் ஒப்பிடமுடியாததும் ஈடு இணையற்றதுமான பாத்திரமாகத் தோழி திகழ்கின்றதைக் காணமுடிகின்றது. தோழிக்குப் பல பெயர்கள் இருந்தாலும் தோழி எனும் சொல்லே சிறப்புடையதாகவும், பழமைமிக்கதாகவும் விளங்குகின்றது.

தலைவியின் களவொழுக்கம் தோழியர் பலருக்கும் தெரிந்தால் அலர்பட்டு ஊரறியும் என்பதால் தோழியர் பலர் இருப்பினும் சங்கப் புலவர்கள் ஒருத்தியையே அகப்பாடல்களில் முதன்மைப்படுத்தியும், முழுமைப்படுத்தியும் காட்டியுள்ளனர்.

அகநானூற்று மருதத்திணையில் தலைவன் மிகவும் முக்கியப் பாத்திரமாகத் திகழ்கின்றான். மருதத்திணையில் தலைவன், தலைவியின் ஊடலையும், சினத்தைத் தணிப்பதற்குக் கையாளும் உத்திகளும், தந்திரங்களும் பற்பல காணப்படுகின்றன.

மருதத்திணையில் பரத்தை தனக்கெனத் தனி இடம்பிடித்து வலம்வருகின்றாள். மருதத்திணையில் பரத்தையருக்கும், தலைவிக்கும் இடையே நடைபெறும் உரையாடல்கள் உளவியல் சார்புத்தன்மை கொண்டு விளங்குவதை உணரமுடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. தொல். பொருள். இளம். அகத், நூற்பா.57
2. சுப்புரெட்டியர்.ந., அகத்திணைக் கொள்கைகள், பக்.419-420
3. மாணிக்கனார், வ. சுப., தமிழ்க்காதல், ப.239
4. கழகத் தமிழ் அகராதி, ப.522
5. குறள். 54
6. தொல். பொருள். இளம். களவு, நூற்பா.7
7. மேலது, நூற்பா.27
8. தொல். பொருள். இளம். கற்பு, நூற்பா.17
9. இராமகிருட்டிணன், ஆ., அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, ப.151
10. ஐங்குறுநூறு. 265
11. சுப்புரெட்டியர், ந., அகத்திணைக் கொள்கைகள், ப.82
12. ஐங்குறுநூறு. 211